Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY MAY 24, 2023

புதன்கிழமை மே 24, 2023 | ஒளி: 09 கதிர்: 003 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

## தங்கத்துடன் வந்த எம்.பி சுங்கத்திடம் சிக்கினார்

புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம், மூன்றரை கிலோகிராம் தங்கத்துடன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுங்கப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு செவ்வாய்க்கிழமை (23) டுபாயில் இருந்து பிளைய் டுபாய் விமானச் சேவைக்கு சொந்தமான எப்.இஸட் 1025 என்ற விமானம் காலை 10.40க்கும். பிளைய் டுபாய் விமானச் சேவைக்கு சொந்தமான எப்.இஸட் 547 காலை 9.30க்கும் தரையிறங்கின.

அதிலொரு விமானத்தின் ஊடாக வந்திறங்கிய எம்.பி, விசேட பிரமுகர்கள் வெளியேறும் பகுதியில் வைத்தே, மூன்றரை கிலோகிராம் தங்கத்துடன் கைது செய்யப்பட்டார்.



கைப்பற்றப்பட்ட தங்கத்தின் உள்நாட்டு பெறுமதி ஏழு கோடியே 50 இலட்சம் ரூபாயாகும்.

கொழும்பு, சுங்க கண்காணிப்பு பிரிவு அதிகாரிகள், கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு வந்தே கைது செய்துள்ளார்.

விசேட பிரமுகர்கள் பயன்படுத்தும் வழியை பயன்படுத்தி, தங்கம் கடத்தப்பட்டமை இது இரண்டாவது சந்தர்ப்பமாகும்.

இதற்கு முன்னர் 1978 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அனுர டேனியல், இவ்வாறே விசேட பிரமுகர்கள் பயன்படுத்தும் வழியை பயன்படுத்தி தங்கத்தை கடத்திவரும் போது, சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ‘தங்க’ எம் பிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும்

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் 3 கிலோ தங்கத்துடன் கைது செய்யப்பட்டுள்ள முஸ்லிம் தேசிய கூட்டமைப்பின் எம்.பி.யான அலி சப்ரி ரஹீமுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி என்பன வலியுறுத்தின அலி சப்ரி ரஹீம் தொடர்பில் பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (23) விசேட கூற்றை முன்வைத்த போதே இரு கட்சிகளும் இவ்வாறு வலியுறுத்தின.

தொடர்ச்சி P2

இறுதி யுத்தத்தில் இரசாயன குண்டு

## சர்வதேச விசாரணைக்கு இலங்கை ஏன் அஞ்சுகிறது?

### ஸ்ரீதரன் கேள்வி ரூடோவின் கருத்தை மதிப்பதாகவும் தெரிவிப்பு



யுத்த குற்றம் இடம்பெறவில்லை, தமிழ்கள் இனபடுகொலை செய்யப்படவில்லை என்றால் ஏன் சர்வதேச விசாரணைக்கு இலங்கை ஏன் அஞ்சுகிறது என்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான எஸ்.ஸ்ரீதரன் கேள்வி எழுப்பினார்.

மேலும், மே 18ஆம் திகதியன்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பில் கனேடிய பிரதமர் ஜஸ்டின் ரூடோ வெளியிட்ட கருத்தை தாம் மதிப்பதாகவும் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

## ஆணைக்குழு அம்பலமாக்கும்



இலங்கை மின்சார சபையினால் முன்மொழியப்பட்ட மின் கட்டண திருத்தத்தை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு பகிரங்கப்படுத்த உள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.

மின் கட்டணங்களை 3 சதவீதத்தால் குறைப்பதற்கான இலங்கை மின்சார சபையின் முன்மொழிவு மற்றும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் மாற்று முன்மொழிவு ஜூன் 1 ஆம் திகதி வெளியிடப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆணைக்குழுவின் சட்டத்தின்படி,

தொடர்ச்சி P2

முன்னாள் போராளிகள் உள்ளிட்ட அனைவரையும்

## பொதுவாக நினைகூர நினைவகம்

### ஜனாதிபதியின் யோசனைக்கு அங்கிகாரம்



இலங்கையில் ஆயுத மோதல்கள், அரசியல் அமைதியின்மைகள் அல்லது குடியியல் குழப்பங்களின் விளைவாக உயிர்நீத்தவர்களை நினைவுகூரும் நினைவகமொன்றை கொழும்பு நகரில் பொருத்தமன இடமொன்றில் நிர்மாணிப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

உயிர்நீத்த பொதுமக்கள், முப்படையினர் மற்றும் பொலிஸ் அலுவலர்கள் மற்றும் முன்னாள் போராளிகள் உள்ளிட்ட அனைத்து நபர்களையும் நினைவு கூறுவதற்கான நினைவகத்தை நல்லிணக்கம் மற்றும் மீளிணைப்பின் அடையாளமாக நினைவகம் அமைக்கப்படவுள்ளது.

சுதந்திரத்தின் பின்னர் இலங்கை குடியியல் குழப்பங்கள், அரசியல் அமைதியின்மைகள், இன மோதல்கள் மற்றும் நீண்டகால ஆயுத மோதல்கள் போன்ற வரலாறுகளுக்கு முகங்கொடுத்துள்ளதுடன், குறித்த காலப்பகுதியில் அனைத்து இன, மத, தொழில் மற்றும் ஏனைய தனித்துவங்களைக் கொண்ட பிரஜைகள் அவ்வாறான அபாயங்களுக்கும் சொல்லொணாத் துயரங்களுக்கும் ஆளாகியுள்ளனர்.

தொடர்ச்சி P2

புலிகளையும் படையினரையும் சமநிலையில் வைக்கும்

# ‘நினைவுத் தூபி’ கோழையானது

### அரசாங்கத்தை சாடுகிறார் வீரசேகர



முப்படையினரையும், விடுதலை புலிகளையும் சமநிலையில் வைத்துப் பார்க்க அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானம் வெட்கக்கேடானது என்றும் அரசாங்கத்தின் இந்த செயலுக்கு வெட்கமடைகிறேன் என்றும் தெரிவித்த ரியர் அட்மிரல் சரத் வீரசேகர எம்.பி, நினைவு தூபி அமைக்கும் தீர்மானத்தை அரசாங்கம் திருத்திக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டார். ‘நினைவுத் தூபி’ஒன்றை அமைக்க அமைச்சரவை வழங்கிய அங்கீகாரத்தை நல்லிணக்கம் என்று கூறக் கூடாது. இதற்குப்பெயர் கோழைத்தனமானது என்றார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (23) இடம்பெற்ற பந்தயம், சூதாட்ட விதிப்பனவு திருத்தச் சட்டமூல இரண்டாம் வாசிப்பு மீதான மீதான விவாதத்தில் உரையாற்றும்போது மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,“யுத்தத்தில் உயிரிழந்த அனைவரையும் நினைவுகூரும் வகையில் ‘நினைவுத் தூபி’ஒன்றை அமைக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அறிய முடிகிறது. இதனை நல்லிணக்கம் என்று கூறக் கூடாது.

தொடர்ச்சி P2

## இலங்கையின் கொள்கை சூழல் சவாலாகவுள்ளது

### ஐஎம்எப் குழுவின் அறிக்கையில் தெரிவிப்பு




இலங்கையின் ஒட்டுமொத்த மேக்ரோ பொருளாதாரம் மற்றும் கொள்கைச் சூழல் சவாலானதாக உள்ளது என்று சர்வதேச நாணய நிதியத்தின் தூதுக்குழு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மே மாதம் 11 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரை இலங்கைக்கு விஜயம் செய்து அண்மைய பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் நாணய நிதிய ஆதரவு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது பற்றி குறித்த குழு கலந்துரையாடியது.

தொடர்ச்சி P2

## தையிட்டி விகாரைக்கு எதிர்ப்பு



யாழ். வலிகாமம் - தையிட்டி விகாரை திறப்பு விழாவிற்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் எதிர்ப்பு போராட்டத்தினை முன்னெடுத்து வந்த நிலையிலேயே செவ்வாய்க்கிழமை (23) காலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

“தையிட்டி பகுதியில் சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்ட விகாரையை அகற்றக் கோரி, திங்கட்கட்கிழமை (22) மதியம் 3 மணியளவில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் செயலாரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரன் உட்பட அக்கட்சியின் உறுப்பினர்கள் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இந்த நிலையில், புதிய நீதிமன்ற உத்தரவொன்றை காண்பித்து போராட்டக்கா ரர்களை விலகும் படி பொலிஸார் கோரியிருந்தனர்.

தொடர்ச்சி P2

## ஜனகவை நீக்க தயாராகும் எதிர்க்கட்சி எம்.பிக்கள்



பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் திரு.ஜனக ரத்நாயக்கவை அந்தப் பதவியில் இருந்து நீக்கும் பிரேரணைக்கு ஆதரவாக ஐக்கிய மக்கள் சக்தியின் 15 பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பல அரசியல் கட்சிகள் வாக்களிக்கத் தயாராகி வருவதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப்போதும் கூட, அரசாங்கத்தின் உயர்மட்டத் தலைவர்களுடன் கலந்தாலோசித்து பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பதாக பாராளுமன்ற உறுப்பினர்கள் உறுதியளித்ததாக அரசியல் வட்டாரங்கள் மூலம் அறிய முடிகிறது.

தொடர்ச்சி P2

ஜெ வலயத்தின் உண்மையான நோக்கம்

## சிங்கள குடியேற்றங்களை உருவாக்கும் முயற்சியா?

### சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வி

ஜெ வலயத்தின் உண்மையான நோக்கம் என்ன என்பதை அரசாங்கம் விளக்க வேண்டும் என்று தெரிவித்துள்ள ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க. பிரேமச்சந்திரன் வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களை உருவாக்குவதற்கான முயற்சியா? என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

தொடர்ச்சி P2



## சீன மண்ணெண்ணெய்...

இலங்கை மீனவர்களுக்கு வழங்குவதற்கான சீன அரசாங்கம் ஒருதொகை மண்ணெண்ணை நன்கொடையாக வழங்கியுள்ளது.
இலங்கை முழுவதும் உள்ள 27,000 மீன்பிடி படகுகளுக்கு 4.05 மில்லியன் லீட்டர் மண்ணெண்ணெய் பெற்றுள்ளன,
உள்நாட்டு மற்றும் வெளி சவால்களை சமாளிக்க சீன அரசாங்கத்தால் இலங்கை மீனவர்களுக்கு நன்கொடையாக வழங்கப்பட்டது.
இதன் உத்தியோகபூர்வ வைபவம், பாணந்துறை கடற்றொழில் துறைமுகத்தில், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த மற்றும் இலங்கைக்கான சீனத் தூதுவர் வீ ஷென் ஹொன் ஆகியோர் தலைமையில் செவ்வாய்க்கிழமை (23) இடம்பெற்றது.

ஐக்கிய நாடுகளின் 28ஆவது

## காலநிலை மாற்ற மாநாட்டில் பங்கேற்குமாறு அழைப்பு



ஐக்கிய நாடுகளின் 28ஆவது காலநிலை மாற்ற மாநாட்டில் பங்கேற்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஐக்கிய அரபு இராச்சிய ஜனாதிபதி மொஹமட் பின் சயீத் அல் நஹ்யான் அழைப்பு விடுத்துள்ளார்.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஜனாதிபதியினால் அனுப்பப்பட்ட அழைப்புக் கடிதம்,

தொடர்ச்சி P2

## மரக்கறிகளின் விலைகள் எகிறுகின்றன



■ செ.திவாகரன்

நுவரெலியா மத்திய பொருளாதார நிலையத்திலும் , மத்திய பொருளாதார சந்தையிலும் மரக்கறிகளின் விலைகள் கடந்த சில நாட்களை விட மீண்டும் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தொடர்ச்சி P2

## 22 தமிழ் அரசியல் கைதிகளே உள்ளனர்



பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட 22 தமிழ் அரசியல் கைதிகள் மட்டுமே தற்போது சிறைகளில் உள்ளனர் என்றும் அவர்களையும் விடுதலை செய்வது தொடர்பான சட்ட நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டுள்ளது என்றும் நீதி இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்ன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (23) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி.யான சார்ள்ஸ் நிர்மலநாதன் முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## பொதுவாக நினைகூர நினைவகம்

இன ரீதியான, மத ரீதியான, அரசியல் ரீதியான கருத்தாக்கங்கள் அல்லது வேறு காரணங்களின் அடிப்படையில் எந்தவொரு வகையான மோதல்களும் மக்களின் நல்வாழ்க்கையில் மிகவும் பாதிப்புக்களை ஏற்படுத்துவதுடன், தேசத்தின் முன்னோக்கிய பயணத்திற்கு தடையாகவும் அமைகின்றமை கடந்தகால கசப்பான அனுபவங்கள் எமக்குப் பறைசாற்றுகின்றன.

எவ்வாறாயினும் மக்களின் அமைதியையும் பாதுகாப்பையும் ஆபத்துக்குள்ளாக்கி சமூக பொருளாதார கட்டமைப்புக்களை சீரழிக்கின்ற அத்தகைய சம்பவங்கள் அடிக்கடி தோன்றுகின்ற போக்குகள் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன.

2018 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகச் சட்டத்தின் மூலம் நினைவேந்துகை மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் மூலம் கூட்டாக இழப்புக்களை வழங்குவது அழுத்தங்களுக்கு உள்ளாகிய நபர்களின் சமூகங்களுக்கும் குழுக்களுக்கும் ஏதுவான வகையிலான உரிமை என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அந்த யோசனையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 'நினைவுத் தூபி' கோழையானது

இதற்குப்பெயர் கோழைத்தனம்.

நாட்டுக்காக உயிர் தியாகம் செய்த முப்படையினரையும், பயங்கரவாதிகளான விடுதலை புலிகளையும் எவ்வாறு சம நிலையில் பார்க்க முடியும். நாட்டில் அரசியலமைப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒருமைப்பாட்டை பாதுகாக்கவே முப்படையினர் போராடினார்கள். விடுதலை புலிகள் நாட்டைப்பிரிக்க போராடினார்கள்.

திருகோணமலை மாவட்டத்தில் சியாம் நிகாய மத வழிபாட்டுக்கு தமிழ் அரசியல்வாதிகள் காரணமின்றி தடையேற்படுத்துவார்களாயின் பாரிய அழிவு ஏற்படும் என்று நான் தெரிவித்த கருத்தின் நோக்கத்தை அறியாமல் ரவூப் ஹக்கீம் எம்.பி. தெரிவித்த கருத்துக்களையிட்டு கவலையடைகிறேன்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

## 'தங்க' எம் பிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும்

"விமான நிலையத்தில் 3 கிலோ தங்கத்துடன் அலி சப்ரி ரஹீம் எம்.பி. கைது செய்யப்பட்டுள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன. அவர் ஒரு எம்.பி. என்பதற்காக எந்த சிறப்புரிமைகளும் வழங்கப்படாது அவர் விசாரிக்கப்பட வேண்டும். ஏனெனில் அவரின் இவ்வாறான செயற்பாடுகளால் அனைத்து எம்.பி.க்களும் இப்படிப்பட்டவர்கள் தான் என மக்கள் நினைத்து விடுவார்கள். எனவே அவர் மீது உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்" என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி.யான ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார்.

"ஹர்ஷன ராஜகருண எம்.பி.யின் கருத்துடன் நாங்களும் உடன்படுகின்றோம். அலி சப்ரி ரஹீம் எம்.பி. தொடர்பில் கடும் சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டும். இவ்வாறான செயல் களில் எம்.பி.க்கள் ஈடுபட ஒரு போதும் அனுமதிக்கக்கூடாது எனவே அவர் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்ரிபால சிறிசேனவும் சுட்டிக்காட்டினார்.

## சர்வதேச விசாரணைக்கு இலங்கை ஏன் அஞ்சுகிறது?

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (23) இடம்பெற்ற பந்தய சூதாட்ட விதிப்பனவு திருத்த சட்ட இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் சுட்டிக்காட்டினார்.

"முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பில் கனேடிய பிரதமர் வெளியிட்ட கருத்தை இலங்கை அரசாங்கம் மறுத்துள்ளது. ஏற்றுக்கொள்ள முடியாது என குறிப்பிட்டுள்ளது. ஆனால் இலங்கை தொடர்பில் கனடா பிரதமரின் கருத்தை நாம் மதிக்கிறோம்

கனேடிய பிரதமர் வெளியிட்ட கருத்து தொடர்பில் இலங்கையில் உள்ள உயர்ஸ்தானிகரிகரிடம் வெளிவிவகாரத்துறை அமைச்சர் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார். கனேடிய பிரதமரின் கருத்து இந்த நாட்டில் தமிழ் மற்றும் சிங்கள மக்கள் மத்தியில் பிரிவினைவாதத்தை ஏற்படுத்தும் என்று வெளிவிவகாரத்துறை அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்

இதன்மூலம் நாட்டில் இன முரண்பாடு உள்ளது என்பதை வெளி விவகாரத்துறை அமைச்சர் ஏற்றுக் கொண்டுள்ளார். இராணுவத்தினரிடம் பிள்ளைகளை ஒப்படைத்தோம், எமது பிள்ளைகளை தாருங்கள் என பாதிக்கப்பட்ட மக்கள் கோருவது நியாயமானதே இதனை எவ்வாறு பிரிவினைவாதம் என்று குறிப்பிட முடியும்.

காணாமல்போனார் விவகாரத்துக்கு ஒரு சிறந்த தீர்வை பெற்றுத் தருவதாக ஜனாதிபதி குறிப்பிட்டார். இதனையே ஆட்சியில் இருந்த அரச தலைவர்கள் அனைவரும் குறிப்பிடுகிறார்கள். இலங்கை ஆட்சியாளர்கள் சர்வதேசத்தை ஏமாற்றுகிறார்கள். இதன் காரணமாகவே சர்வதேசம் இலங்கையை தொடர்ந்து வலியுறுத்துகிறது.

உண்மையை கண்டறிவதாக இலங்கை சர்வதேசத்துக்கு வாக்குறுதி வழங்கியது. அதனையே சர்வதேசம் இன்று கோருகிறது. யுத்த குற்றம் இடம்பெறவில்லை, தமிழ்கள் இனபடுகொலை செய்யப்படவில்லை என்றால் ஏன் சர்வதேச விசாரணைக்கு அச்சப்பட வேண்டிய தேவையில்லை.

இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலை தொடர்பில் பிரித்தானியா, அமெரிக்கா உட்பட கரிசணை கொள்ள வேண்டும். தமிழர்கள் மீது படுகொலை கட்டவிழ்க்கப்படவில்லை, இரசாயன குண்டுத்தாக்குதல் பிரயோகிக்கப்படவில்லை என்றால் அரசாங்கம் சர்வதேச பொறிமுறை விசாரணைக்கு கதவைத் திறக்கலாம்.

இறுதி கட்ட யுத்தத்தில் பசியால் பல்லாயிரக்கணக்கான பிள்ளைகள் மரணித்ததை ஒருபோதும் மறுக்க முடியாது. இறுதி கட்ட யுத்தத்தில் இரசாயன குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்பதை பலர் தற்போது வெளிப்படுத்தியுள்ளார்கள், பலர் சாட்சியமளித்து ள்ளார்கள்." என்றார்.

## ஜனகலவை நீக்க தயாராகும் எதிர்க்கட்சி எம்.பிக்கள்



இதேவேளை, ஆளும் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் இன்று (24) இடம்பெறவுள்ள பாராளுமன்ற கூட்டத்தில் கட்டாயம் கலந்து கொள்ளுமாறு ஆளும் கட்சி அமைப்பாளர் அலுவலகத்தினால் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறான விசேட அறிவித்தல் வழங்கப்பட்டுள்ள நிலையில், குறித்த காலப்பகுதியில் பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாடு செல்வதற்கும் தற்காலிகமாக தடை விதிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் இருந்த இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் மற்றும் ஆளும் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்கள் பலர் ஏற்கெனவே நாட்டுக்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியில் இருந்து தலைவர் ஜானக நீக்கப்பட்டமை தொடர்பில் இன்று(24) பாராளுமன்றத்தில் விவாதம் நடத்தப்படவுள்ளதுடன், அது தொடர்பான வாக்கெடுப்பு அன்றையதினம் பிற்பகல் நடைபெறவுள்ளது.

## தையிட்டி விகாரைக்கு எதிர்ப்பு

இதனை மறுத்த போராட்டக்காரர்கள் செவ்வாய்க்கிழமை (23) காலை மீண்டும் எதிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இதனை தொடர்ந்தே, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## இலங்கையின் கொள்கை சூழல் சவாலாகவுள்ளது

கலந்துரையாடல்களின் முடிவில் குழு வெளியிட்ட அறிக்கையில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டதுடன், உதவித் திட்டத்தின் கீழ் முக்கிய கடமைகளை நிறைவேற்றுவதில் அதிகாரிகளின் தொடர்ச்சியான முயற்சிகளை வரவேற்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணவீக்கத்தை கட்டுப்படுத்துதல், மாற்று விகிதத்தை நிலைப்படுத்துதல் மற்றும் மத்திய வங்கியின் இருப்பு இடையகங்களை மீண்டும் உருவாக்குதல் ஆகிய வலுவான கொள்கை முயற்சிகளுக்குப் பின்னர், இலங்கையின் பொருளாதார நிலைமை முன்னேற்றத்திற்கான தற்காலிக அறிகுறிகளைக் காட்டுவதாக சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது.

## சிங்கள குடியேற்றங்களை உருவாக்கும் முயற்சியா?

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவையும் முல்லைத்தீவு மாவட்டத்தையும் மையப்படுத்தி மகாவலி ஜெ வலயம் என்ற பெயரில் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையினால் புதிய வலயம் ஒன்றைத் தோற்றுவிக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ஏற்கெனவே மகாவலி ஆற்றின் நீர் வடக்கு மாகாணத்திற்கு வருவதற்கு சாத்தியமேயில்லை என்று மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையினர் தெரிவித்துள்ள நிலையில் புதிதாக உருவாக்கப்படும் வலயத்தின் நோக்கம் என்ன என்று அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

நாடு சுதந்திரமடைந்த பின்பு, பல இலட்சம் மலையகத் தமிழர்களை நாடற்றவர்களாக்கி, அவர்களை நாடுகடத்தினீர்கள். பின்னர் இனக்கலவரங்கள் என்ற பெயரில் தென்பகுதியில் இருந்த தமிழ் மக்களைக் கொன்று, அவர்களது வியாபாரம், சொத்துகளை அழித்து, அவர்களது பூர்வீகத் தாயகமான வடக்கு-கிழக்கிற்குத் துரத்தினீர்கள்.

பின்னர் யுத்தம் ஒன்றைத் தொடங்கி, வடக்கு-கிழக்குத் தமிழர்களை உலகெங்கும் அகதிகளாகத் துரத்தினீர்கள். அவர்களது காணிகளைப் பறிமுதல் செய்து சிங்கள மக்களைக் குடியேற்றினீர்கள்.

## காலநிலை மாற்ற மாநாட்டில் பங்கேற்குமாறு அழைப்பு

ஐக்கிய அரபு இராச்சியத்தின் இலங்கைக்கான தூதுவர் காலீத் நாசர் அல் அமெரியினால் ஜனாதிபதியிடம் உத்தியோகபூர்வமாக திங்கட்கிழமை (22) கையளிக்கப்பட்டது.

இந்த அழைப்பை ஜனாதிபதி ரணில் ஏற்றுக் கொண்டமை தொடர்பில் மகிழ்ச்சி வெளியிட்டுள்ள ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஜனாதிபதி மொஹமட் பின் சயீத் அல் நஹ்யான், இலங்கை மக்களின் முன்னேற்றம் மற்றும் செழிப்புக்காக அரசாங்கத்தின் முன்னெடுப்புகளுக்கும் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்ற மாநாடு எதிர்வரும் நவம்பர் மாதம் 30 முதல் டுபாயில் உள்ள எக்ஸ்போ சிட்டியில் உலகத் தலைவர்கள், அரச பிரதிநிதிகள், சூழலியலாளர்கள், புத்துஜீவிகள் ஆகியோரின் பங்களிப்புடன் ஆரம்பமாக உள்ளதோடு ஐக்கிய அரபு இராச்சியத்தின் 52 ஆவது தேசிய தின விழாவுடன் இணைந்ததாக அரச தலைவர்கள் மாநாடு டிசம்பர் 01 மற்றும் 02 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

காலநிலை மாற்றத்தை கையாள்வதில் ஐக்கிய அரபு இராச்சியத்தின் அர்ப்பணிப்பை வலியுறுத்தியுள்ள ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஜனாதிபதி, காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புக்களை சமாளிப்பதில் சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் பங்களிப்பின் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்துள்ளார்.

## ஆணைக்குழு அம்பலமாக்கும்

கட்டணங்களை திருத்தும் போது அனைத்து பங்குதாரர்களிடமிருந்தும் பரிந்துரைகள் மற்றும் முன்மொழிவுகள் பெறப்பட வேண்டும் என்றும் அதற்கமைய உத்தேச மின்சாரக் கட்டணத் திருத்தம் தொடர்பான ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளை ஜூன் 20 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என்றார்.

எழுத்து மற்றும் வாய்மொழி சமர்ப்பிப்புகளை ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் பொதுமக்கள் மற்றும் பிற பங்குதாரர்களின் முன்மொழிவுகளை கருத்தில் கொண்டு, மின்சார கட்டணத்தை திருத்துவதற்கான திருத்தப்பட்ட திட்டம் பரிந்துரைக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

ஜூலை 1 ஆம் திகதி நடைமுறைக்கு வரும் இறுதி செய்யப்பட்ட கட்டணங்கள் ஜூன் 30 ஆம் திகதி வெளியிடப்படும் எனவும் மின்சாரக் கட்டணத்தை திருத்துவதற்கான முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறு பொது மக்களிடம் அவர் கேட்டுக்கொண்டார்.

## மரக்கறிகளின் விலைகள் எகிறுகின்றன

நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தின் விலைப்பட்டியலின் பிரகாரம், ஒரு கிலோ கோவா 250 - 280 ரூபாய்கும் ஒரு கிலோ கரட் 240 - 250 ரூபாய்க்கும் லீக்ஸ் 250 - 260 ரூபாய், உருளைக்கிழங்கு 270 ரூபாய், பீட்ரூட் 320 ரூபாய், தக்காளி 450 ரூபாய் என்ற விலையில் விற்பனையாகின்றன.

புரோக்கோலி 1200 - 1300 ரூபாய்க்கும் ஒரு கிலோ கோலிபிளவர் 600 - 650 ரூபாய்கும் விற்பனை செய்யப்படுவதாகவும் அத்தோடு நாட்டு மரக்கறிகளின் விலையும் அதிகரித்த வண்ணம் காணப்படுவதாக மரக்கறி வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தின் தலைவர் அருண சாந்த ஹெட்டியாராச்சியிடம் வினவிய போது,

மலையக மரக்கறி வகைகள் கட்டுப்பாடில்லாமல் நாடுமுழுவதும் விநியோகிக்கப்படுவதால் விலை விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்துள்ளதாக குறிப்பிட்டார்.

பயிரிடப்பட்டுள்ள மரக்கறிகளின் அறுவடை காலம் நெருங்கியுள்ள நிலையில், நாட்டில் தற்போது பெய்து வரும் மழை காலநிலை காரணமாக குறித்த மரக்கறிகள் அழுகி போவதற்கான ஆபத்து உள்ளதாலும், உள்ளூர் மரக்கறி உற்பத்தி செய்யப்படும் இடங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளதால் பெருமளவு மரக்கறி தோட்டங்கள் பாதிப்படைந்துள்ளதாலுமே இந்நிலை ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்..

## 22 தமிழ் அரசியல் கைதிகளே உள்ளனர்

யுத்தம் முடிவடைந்து 14 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையிலும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் பல ஆண்டுகாலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் சிறைக்கைதிகளை விடுவிக்க அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும் .இது தொடர்பில் ஜனாதிபதியுடனான சந்திப்பிலும் நாம் வலியுறுத்தியுள்ளோம்" என, சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த நீதி இராஜாங்க அமைச்சர், "பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் 45 ஆண்களும்,1 பெண்ணும் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். யுத்த காலத்தில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 30 பேரின் எண்ணிக்கை 22 ஆக குறைக்கப்பட்டுள்ளது" என்றார்.

"சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 22 பேருக்கு எதிரான விசாரணைகள் நிறைவு பெறாத காரணத்தினால் அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. ஆகவே இந்த 22 பேர் தொடர்பில் நீதியமைச்சு சட்டமாதிபர் திணைக்களத்துடன் ஒன்றிணைந்து விசேட நடவடிக்கைகளை எடுக்கப்பட்டுள்ளது. இவர்களையும் விடுதலை செய்வது தொடர்பான சட்ட நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டுள்ளது" என்றார்.

கண்டி போகம்பர சிறைச்சாலையில் உள்ள கைதிகளுக்கு முறையான உணவு கிடைப்பதில்லை என சிறைக் கைதிகளின் உறவினர்கள் முறைப்பாடு செய்துள்ளதாக சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த நீதி இராஜாங்க அமைச்சர், "சிறைச்சாலைகளில் விநியோகிக்கப்படும் உணவு தொடர்பில் முன்வைக்கும் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள முடியாது. சிறைச்சாலை கைதிகள் நிர்வாகம், உணவு விநியோகம் உள்ளிட்ட தேவைகளுக்காக வருடாந்தம் 4.6 பில்லியன் ரூபா செலவிடப்படுகிறது. பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் இந்த தொகை வரையறுக்கப்படவில்லை. ஆகவே கண்டி போகம்பர சிறைச்சாலை தொடர்பில் குறிப்பிட்ட விடயம் குறித்து விசேட கவனம் செலுத்துவோம் என்றார்.

# மன்னாரில் கோர விபத்து: ஓட்டோ சாரதி மரணம்

எஸ்.றொசேரியன் லெம்பேட்

மன்னார் பிரதான பாலத்துக்கு அருகில் செவ்வாய்க்கிழமை (23) காலை 11 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் ஓட்டோ சாரதி உயிரிழந்ததோடு, மேலும் சிறுவர்கள் உள்ளடங்களாக ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் படுகாயமடைந்துள்ளனர்.

மன்னாரில் இருந்து பிரதான பாலம் ஊடாக பயணித்த மகேந்திரா ரக வாகனம் மற்றும் மதவாச்சி வீதியூடாக மன்னார் நோக்கி பயணித்த முச்சக்கரவண்டியும் மோதி விபத்துக்கு உள்ளாகியுள்ளது.



வவுனியா மாவட்டத்தை சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கணவன், மனைவி உட்பட 9, 6 மற்றும் 4 வயதுகளுடைய மூன்று பிள்ளைகள் உள்ளடங்களாக ஐவர், திருமண நிகழ்வு ஒன்றிற்காக முச்சக்கர வண்டியில் வருகை தந்த நிலையில் விபத்து இடம்பெற்றுள்ளது. இந்த திருமண நிகழ்வு இன்று (24) நடைபெறவுள்ளன.

பலத்த காயங்களுடன் ஏனையோர் மன்னார் பொது வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



# 'உதிரம் கொடுத்து உயிரைக் காப்போம்'

ஆர்.ஜெயஸ்ரீராம்

'உதிரம் கொடுத்து உயிரைக் காப்போம்' என்ற தொணிப்பொருளில் மாபெரும் இரத்ததான முகாம் கல்குடா கறுவாக்கேணி விக்னேஸ்வரா கல்லூரியில் செவ்வாய்க்கிழமை (23) நடைபெற்றது.

கல்லூரியின் 63 ஆவது கல்லூரி தினத்தினை முன்னிட்டு பழைய மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட முதல் நிகழ்வாகும்.

இதில், ஆசிரியர்கள்,பாடசாலை மாணவர்கள்,பழைய மாணவர்கள் மற்றும் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.மட்டக்களப்பு போதானை வைத்தியசாலை ,வாழைச்சேனை தள வைத்தியசாலை மருத்துவ சேவை உத்தியோகஸ்த்தர்களின் பங்குபற்றினர்.

# டெங்கு நுளம்பை கட்டுப்படுத்தும் சோதனை



எப்.முபாரக்

திருகோணமலை மாவட்டத்தில் டெங்கு நுளம்பின் தாக்கத்தின் தீவிரத்தன்மையை கட்டுப்படுத்தும் நோக்கில் டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்களில் சோதனை நடவடிக்கைகள் கடந்த இரு வாரங்களாக முன்னெடுக்கப்பட்டுகின்றன.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் (திருமதி) ஜே.ஜே.முரளிதரனின் பணிப்புரைக்கமைவாக கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிமனையின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க, திருகோணமலை சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டின் கீழ் திருகோணமலை மாவட்டத்திலுள்ள எல்லாப் பிரதேசங்களிலும் டெங்கு நுளம்பு பரிசோதனை நடவடிக்கைக்கள் கடந்த இரு வாரங்களாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# புதிய நிர்வாகம் தெரிவு

எஸ். தில்லைநாதன்

வடமராட்சி வடக்கு மற்றும் வடமராட்சி கிழக்கு பிரதேசங்களை உள்ளடக்கியதாக செற்பட்டு வரும் ஊடகவியலாளர்களை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வரும் 'யாழ். வடமராட்சி ஊடக இல்லம்' இன் புதிய நிர்வாக தெரிவு இடம்பெற்றுள்ளது.

பருத்தித்துறை, விநாயக முதலியார் வீதியில் அமைந்துள்ள யாழ். வடமராட்சி ஊடக இல்ல அலுவலகத்தில் இடம்பெற்றது.

அதனடிப்படையில், மூத்த ஊடகவியலாளர் சின்னத்துரை தில்லைநாதன் தலைவராகவும், இராஜரட்ணம் மயூதரன் செயலாளராகவும், தங்கராசா காண்டீபன் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். செல்வநாயகம் கிரிசாந் உப- தலைவராகவும், சரவணபகவான் சிறிகிருஸ்ணதரன் உப- செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய அரசின் ஆயுஷ் புலமைப்பரிசில்

ஆயுஷ் புலமைப்பரிசில் திட்டத்தின்கீழ் 2023-24 கல்வியாண்டில் பட்டப்படிப்பு முதல் கலாநிதி கற்கைநெறி வரையான பல்வேறு பிரிவுகளிலும் கற்க விரும்பும் இலங்கை பிரஜைகளுக்கு கீழ்வரும் கற்கைநெறிகளுக்கு கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் புலமைப் பரிசில்களை அறிவித்துள்ளது;

ஆயுள்வேதம், யுனானி, சித்த மருத்துவம் மற்றும் ஹோமியோபதி ஆகிய துறைகளில் பட்டப்படிப்பினை தொடர விரும்பும் விண்ணப்பதாரிகள் க.பொ.த உயர் தரத்தில் பௌதீகவியல், இரசாயனவியல் மற்றும் உயிரியல் ஆகியவற்றில் சித்திபெற்றிருக்கவேண்டியது அவசியமாகும். அதேவேளை யோகாவில் B.Sc மற்றும் B.A (யோக சாஸ்த்ர) ஆகியவற்றுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் க.பொ.த உயர் தரத்தில் ஏதாவது ஒரு பிரிவில் சித்தியடைந்திருக்க வேண்டும்.


இதற்கான விண்ணப்பங்களை ICCR A2A தளம் ஊடாக (www.a2ascholarships.iccr.govin ) 2023 மே 31ற்கு முன்னதாக பதிவேற்றம் செய்யவும். இவ்விடயம் தொடர்பான மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள விரும்பும் விண்ணப்பதாரிகள் கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் கல்விப் பிரிவினை 0112421605, 0112422788, 0112422789 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் ஊடாகவும் அத்துடன் edu.colombo@mea.gov.in என்ற மின்னஞ்சல் முகவரியூடாகவும் தொடர்பு கொள்ளலாம்.

# மகோற்சவ பெருவிழா

சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி அருள்மிகு வீரகத்தி விநாயகர் தேவஸ்தான மகோற்சவ பெருவிழா வியாழக்கிழமை (25) காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் இடம்பெறவுள்ளது.

இதற்கமைய வேட்டைத்திருவிழா 31 ஆம் திகதி புதன்கிழமை மாலை 4 மணிக்கும் சப்பற திருவிழா 1 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 7 மணிக்கும் தேர்த்திருவிழா 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கும் தீர்த்தத் திருவிழா 3 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 .30 மணிக்கும் கொடியிறக்கம் அதேநாள் இரவு 7 மணிக்கும் பிராயச் சித்த அபிஷேகம் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கும் பூங்காவனம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கும் வைரவர் பொங்கல் 5 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5 மணிக்கும் இடம்பெறவுள்ளன.

ஆலய பிரதம குரு பண்டிதர்,கலாநிதி சிவஸ்ரீ து.கு. ஜெகதீஸ்வரக்குருக்கள், மகோற்சவ குரு கிரியாரத்தினா சிவாச்சாரியமணி,சிவஸ்ரீ ராம்



.சண்முகானந்தக் குருக்கள் ,ஆலய குரு பிரம்மஸ்ரீ சி. ஜெகதீஸ்வர சர்மா , சாதகாசிரியர் வித்தியாசாகரம் சிவஸ்ரீ ஜெகதீஸ்வர மயூரக்குருக்கள் ஆகியோர் மகோற்சவ கிரியைகளை நடத்துவார்கள்.

# மாடியில் இருந்து விழுந்து சா/த மாணவன் பலி

ராமு தனராஜா

மடுகஸ்தலாவ, ரபர்வத்தை பகுதியை சேர்ந்த 17 வயதுடைய மாணவன் மெதவெலகமவில் உள்ள தனது நண்பரின் வீட்டுக்கு மாணவர்களுடன் சேர்ந்து படிப்பதற்காக சென்றிருந்த போது, மாடியில் இருந்து கீழே விழுந்துமரணமடைந்துள்ளார்.

மேல் மாடியில் படுத்துக் கொண்டு இருந்த போது, சிறுநீர் கழிப்பதற்காக, திங்கட்கிழமை (22) இரவு 10 மணியளவில் எழுந்து சென்றபோது,மேல் மாடியில் இருந்து கீழே விழுந்து காயமடைந்தார்.

அவரை பசறை வைத்தியசாலைக்கு கொண்டு சென்று சிகிச்சை அளிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக பதுளை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

எனினும், சிகிச்சை பலனின்றி புதன்கிழமை (23) காலை 6.30 மணியளவில் உயிரிழந்தார்.

குறித்த மாணவன் பசறை பகுதியில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் இம்முறை தரம் 11ல் கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சைக்கு தோற்றவுள்ளார் என்பதுடன் மேலதிக விசாரணைகளை பசறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மகனை தரையில் அடித்து கொன்ற தந்தைக்கு விளக்கமறியல்

என். ஆராச்சி

தன்னுடைய மூன்று வயதான மகனை தலைகீழாக தூக்கி தரையில் அடித்த தந்தை எதிர்வரும் 30ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர், அவிசாவளை நீதவான் நீதிமன்றத்தில் திங்கட்கிழமை (22) ஆஜர்படுத்தப்பட்டார். அதன்போதே, நீதவான் மேற்கண்டவாறு உத்தரவிட்டார்.

அவிசாவளை தல்துவ தோட்டத்தை வசிப்பிடமாகக் கொண்ட 38 வயதான தங்கராஜ் ரவிச்சந்திரன் என்பவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அவர் மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.



மகனை தூக்கி தரையில் அடித்த சம்பவம் அவரது வீட்டில் கடந்த 16ஆம் திகதியன்று இடம்பெற்றுள்ளது. அவருடைய மனைவி, சம்பவம் இடம்பெற்ற முதல்நாள்தான் வெளிநாட்டில் இருந்து நாட்டுக்குத் திரும்பியுள்ளார்.

படுகாயமடைந்த குழந்தையின் தலை பிளந்து காதுகளில் இருந்து இரத்தம் வெளியேறியதால் அக்குழந்தை கொழும்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார் எனினும், மரணமடைந்துவிட்டார்.

# உலருணவு பொதிகள் வழங்கி வைப்பு

எஸ் தில்லைநாதன்

பருத்தித்துறையில் தெரிவு செய்யப்பட்ட 18 குடும்பங்களுக்கு உலருணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

ஜேர்மனி ஸ்ரூற்காட் நகரைத் தளமாகக் கொண்டு இயங்கும் 'உறவுகளுக்கு கரம் கொடுப்போம்' அமைப்பின் நிதி பங்களிப்புடன் வடமராட்சி ஊடக இல்லத்தின் அனுசரணையுடன் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.



அமரர் வைத்திலிங்கம் அம்பலத்தின் 22ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு இந்த உதவித்திட்டம் வழங்கி வைக்கப்பட்டது.

புலோலி கருகம்பன் கிராமத்தில் உதவி தேவைப்படுவோர் என்று அடையாளம் காணப்பட்ட 18 குடும்பங்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. இந்த குடும்பங்களுக்கு ஆயிரத்து 800 ரூபாய் பெறுமதியான பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.



# சந்திப்பு...

பாப்பரசரின் இலங்கைக்கான நேரடி பிரதிநிதி கத்தரினா (Rit. Rev. BRIAN UDAIGWE) ஆண்டகைக்கும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும் இடையிலான சந்திப்பு திருகோணமலையில் திங்கட்கிழமை (22) நடைபெற்றது.

மக்களின் நல்லிணக்க செயற்பாடுகள் மற்றும் இதர விடயங்கள் தொடர்பாக இந்த சந்திப்பில் கலந்துரையாடப்பட்டன. இதன்போது, திருகோணமலை மறைமாவட்ட ஆயனர் நொயல் இம்மானுவேலும் கலந்து கொண்டார்.

எப்.முபாரக்

# 'இடுகாட்டை' கேட்டு போராட்டம்

துவாரகஷான்

அக்கரப்பத்தனை, நியூபோட்மோர் தோட்டத்துக்குச் சொந்தமான இடத்தினையும் பொது மயானம் உள்ள பகுதியில் காணப்படும் காணிகளையும் தோட்ட தனிநபர் ஒருவர் ஆக்கிரமிப்பு செய்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து , செவ்வாய்க்கிழமை ( 23) இந்த தோட்டத்தைச்சேர்ந்த 150 தொழிலாளர்கள் பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதேவேளை, காரியாலயத்துக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தையும் தொழிலாளர்கள் முன்னெடுத்தனர்.

அந்த இடத்தை தோட்ட நிர்வாகம் உடனடியாக மீளப் பெற்று தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும். என தெரிவித்தே வேலை நிறுத்த போராட்டத்தில் இவர்கள் ஈடுபட்டுள்ளதாக தொழிலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.



அத்தோடு,அக்கரப்பத்தனை பொலிஸ் நிலையத்தில், தோட்ட நிர்வாக அதிகாரி மற்றும் தொழிலாளர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப-தலைவர் எஸ். சச்சிதானந்தன் தோட்ட அதிகாரியோடு கலந்துரையாடல் மேற்கொண்டார். இது தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் புகார் செய்வதாகவும் தோட்ட நிர்வாகத்துடன் கதைத்து காணியை பெற்று மக்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக இவர் மக்கள் மத்தியில் குறிப்பிட்டார்

இக்காணி தொடர்பாக ஏற்கனவே வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அந்த இடத்தை நிர்வாகம் பெற்று தராவிட்டால் தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடபோவதாக தொழிலாளர்கள் நிர்வாகத்துக்கு எச்சரித்துள்ளனர் .

பொதுமக்கள் இணைந்து கையொப்பமிட்ட மகஜர் ஒன்றினையும் நிர்வாக அதிகாரியிடம் வழங்கி வைத்தனர்.

# மக்களுக்கான பிரதிநிதிகளை கண்டறியும் ஒரு தீர்க்கமான நாள்

இலங்கையில் வலு நெருக்கடி என்பது சமீப காலமாக தொடர்ந்து வரும் ஒரு பிரச்சனையாக அமைந்துள்ளது. குறிப்பாக, கடந்த வருட முற்பகுதி முதல் இந்த ஆண்டின் பெப்ரவரி மாத நடுப்பகுதி வரை, இலங்கை வரலாற்றில் மிக மோசமான மின்சாரத் தடை அமல்படுத்தப்பட்ட காலமாக அமைந்திருந்தது.

இந்தக் காலப்பகுதியினுள் இரு தடவைகள் மின்சாரக் கட்டண அதிகரிப்பை மின்சக்தி அமைச்சு மேற்கொண்டிருந்ததுடன், இவ்வாண்டின் முற்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விலை அதிகரிப்பானது பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்தது.

மின்சாரப் பாவனையாளர்களுக்கும், அதனை வழங்குபவர்களுக்குமிடையிலான ஒரு பாலமாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு உள்ளமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக, மின்சாரத் தேவை மற்றும் மின்சார உற்பத்தி, அதன் விலை நிர்ணயம் தொடர்பான தீர்மானங்களில் இந்த ஆணைக்குழுவின் பங்கு மிகவும் முக்கியமானதும், இன்றியமையாததாகும் அமைந்துள்ளது.

இந்த நிலையில், இவ்வாண்டின் முற்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மின்சாரக் கட்டண அதிகரிப்பு தொடர்பில் அந்த ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தார். ஆணைக்குழுவில் அவருடன் இணைந்து பணியாற்றிய அங்கத்தவர்களில் சிலர் அவருக்கு முரணான கருத்துகளை தெரிவித்திருந்த நிலையில், இருவர் தமது பதவிகளை இராஜினாமா செய்திருந்ததுடன், அதற்கு பதிலாக மேலும் இருவரை அரசாங்கத் தரப்பிலிருந்து நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், இந்த புதிய அங்கத்தவர்களின் நியமனத்துடன், பெப்ரவரி மாதத்திலிருந்து மின்சாரக் கட்டணமும் அதிகரிக்கப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து, மின்சக்தி அமைச்சரினால், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தலைவருக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு, இன்றைய தினம் அவரை பணி நீக்கம் செய்வது தொடர்பான பிரேரணை பாராளுமன்றத்தில் வாக்களிப்புக்கு வருகின்றது.

பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் விதிமுறைகளின் பிரகாரம் மின்சாரக் கட்டண அதிகரிப்பு தொடர்பில் ஏதேனும் தரப்புக்கு நிவாரணம் வழங்குவதாயின், முதலில் குறைந்தளவு மின்சாரப் பயன்பாட்டை கொண்டிருப்பவர்களை அது சென்றடைய வேண்டும் என்பது அமைந்துள்ளது. அத்துடன், இந்த விடயம் தொடர்பில் பல தெளிவுபடுத்தல்களை ஆணைக்குழுவின் தலைவர் ஊடகங்களில் வழங்கியிருந்த போதிலும், அவரை பணிநீக்கம் செய்வதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு, இன்றைய தினம் முக்கியத்துவம் வாய்ந்த வாக்கெடுப்பும் பாராளுமன்றத்தில் இடம்பெறவுள்ளது.

அரசாங்கத்தின் தீர்மானங்களுக்கு எதிராக குரல் கொடுப்போர் ஒடுக்கப்படுகின்றமை தொடர்பில் தமிழ் சினிமாவில் நிறையவே நாம் பார்த்துள்ளோம். இலங்கையில் மின்சாரக் கட்டணத் திருத்தம் 2014 ஆம் ஆண்டின் பின்னர் 2022 ஒகஸ்ட் மாதம் வரை கட்டணம் அதிகரிக்கப்படாமை பொது மக்களின் குற்றமில்லை. அதனைக் காரணம் காண்பித்து, முழுச் சுமையையும் பொது மக்கள் மீது சுமத்தி விலை அதிகரிப்பை மேற்கொண்டுள்ளதை முழுப் பூசணியினுள் மறைத்து, அதற்கு எதிராக குரல் கொடுத்த பயன்பாட்டாளர்கள் சார்பான குரல்களை அடக்கச் செய்வதற்கு எத்தனை மக்கள் பிரதிநிதிகள் இன்றைய தினம் ஆதரவளிக்கப் போகிறார்கள் என்பதைப்பார்க்க மக்களும் ஆவலுடன் உள்ளனர்.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

மேகம் கருமையாகும்; பின்னர், அதுவே ஒரு சில நேரங்கள் செல்ல, வெளத்து, வானம் நீலநிறமாகி விடும். இதுபோலவே மானிட வாழ்க்கையும்.

சில பொழுது கவலை; அடுத்து மகிழ்ச்சி, சின்னச் சின்ன அதிர்வுகள். அதுபோய்விட, நகைச்சுவை பேச்சுகள்; நண்பர்கள், உறவினர்களுடன் அரட்டை.

குடும்பங்களில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மனநிலையில் இருப்பர். சகலருக்கும் மனம் மாறிமாறிப் புரளும். இதைக் கண்டுகொள்ளாமல் இருப்பதுவே நல்லது. மீண்டும் அவர்களே திரும்பி வருவார்கள்.

சின்னக் காரியங்களைப் பெரிதாகக் கருதலாகாது. நாங்களும் அவர்களில் ஒரவர் அல்லவா! எனவே, எவரையும் ஒதுக்குவது கூடாது.

தவறு செய்தல், கோபித்தல், ஒதுங்கி நடத்தல், கண்டபடி ஒரவரைச் சீண்டுதல் இவை எல்லாம் நடந்துகொண்டே இருக்கும்.

மிருகங்களுக்கும் உணர்வு உண்டு. ஒருகணம் ஓடிப்பிடிக்கும் கசுபாவமும் மறுகணம், கத்திச் சண்டை செய்வதும் இயல்பானது. இவை உயிரினங்களின் இயல்பு.

எனவே மனஸ்தாபப்படுவதும் பின்னர், ஒன்றிணைவதும் உயிரினங்களுக்கும் எமக்கும் உள்ள ஒற்றுமையாகும். உயிர் வாழ்வு ஒன்றேதான்.

–பருத்தியூர் பாலை. வயிரவநாதன்

# ஆளுநர்கள் மத்தியின் அரசியல் கருவிகள்



எம்.எஸ்.எம். ஐயூப்

நாட்டில் எது நடந்தாலும் அதனை தமது அரசியல் கண்ணோட்டத்தின் படி அல்லது தமது எதிரிக்கு எதிராக பாவிக்கும் நோக்குடன் வியாக்கியானம் செய்வதையே பலர் விரும்புகின்றனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் மூன்று மாகாண ஆளுநர்களை பதவி நீக்கம் செய்து அவர்களுக்கு பதிலாக வேறு மூன்று பேரை நியமித்த போதும் அதனையே அவதானிக்க முடிந்தது.

உதாரணமாக எதிர்கட்சியைச் சேர்ந்த சிலரும் சில சட்ட வல்லுநர்களும் ஆளுநர் ஒருவரை பதவி நீக்கம் செய்ய ஜனாதிபதிக்கு சட்ட அதிகாரம் இல்லை என்றனர். முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வாவும் அவர்களில் ஒருவராக இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அதேவேளை ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்த சிலர் ஜனாதிபதி ஒருவர் புதிதாக பதவியேற்றால் ஆளுநர்களை மாற்றுவது மரபு என்றனர். ஜனாதிபதியின் செயலை நியாயப்படுத்துவதே அவர்களது நோக்கமாகும்.

இந்த இரண்டும் அடிப்படையற்ற வாதங்களாகும். சரத் சில்வா நினைத்தால் எதனையும் சட்ட விரோதம் என்று நிரூபிப்பார் அல்லது அதனையே சட்டபூர்வமானது என்றும் நிரூபிப்பார். ஹெல்பிங் ஹம்பாந்தோட்ட வழக்கில் மஹிந்த ராஜபக்ஷவை தப்பிக்கச் செய்த அவர் பின்னர் அதற்காக நாட்டு மக்களிடம் மன்னிப்புக் கேட்டார். ஆனால் ஆளுநர் நியமனம் தொடர்பாக அவர் முன்வைத்த கருத்து விவாதத்துக்கே இடமில்லாமல் பிழை என்பதை அரசியலமைப்பு துல்லியமாக எடுத்துக் கூறுகிறது.

அரசியலமைப்பில் 154 ஆ (2) வாசகம் ஆளுநர் ஜனாதிபதியால் நியமிக்கபப்டுவதோடு அவர் மீது ஜனாதிபதியின் திருப்தி இருக்கும் வரை அவர் பதவியில் இருப்பார் என்று கூறுகிறது. அதாவது ஜனாதிபதி ஆளுநர் ஒருவரை விரும்பாவிட்டால் அவரை பதவிநீக்கம் செய்ய ஜனாதிபதிக்கு அதிகாரம் இருக்கிறது. அதன் படியே கடந்த 15 ஆம் திகதி ஜனாதிபதி வட மாகாண ஆளுநர் ஜீவன் தியதகராஜா, கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் மற்றும் வடமேல் மாகாண ஆளுநர், முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட ஆகியோரை பதவி நீக்கம் செய்தார்.

சாதாரண தொழிலாளர்களைப் போல் உயர் பதவி வகிப்போர் பதவி நீக்கம் செய்யப்படுவதில்லை. அவர்கள் இராஜினாமாச் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுவதே வழமையாகும். கரன்னகொட, யஹம்பத் மற்றும் தியாகராஜா ஆகியோருக்கும் அவ்வாறு இராஜினாமாச் செய்யுமாறு கூறப்பட்டதாம். ஆனால் அவர்கள் இராஜினாமாச் செய்யாதமையாலேயே பதவிநீக்கம் செய்யப்பட்டதாக கூறப்படுகிறது.

கடந்த 17 ஆம் திகதி ஜனாதிபதி வட மாகாணத்துக்கு இதற்கு முன்னரும் அம் மாகாணத்தில் ஆளுநராக கடமையாற்றிய மூத்த நிர்வாக அதிகாரியான பி.எஸ்.எம். சார்ள்ஸ்ஸையும் கிழக்கு மாகாணத்துக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளர் செந்தில் தொண்டமானையும் வடமேல் மாகாணத்துக்கு முன்னாள் அமைச்சரான லக்ஷ்மன் யாப்பா அபேவர்தனவையும் நியமித்தார்.

புதிதாக ஜனாதிபதி ஒருவர் பதவியேற்றதன் பின்னர் ஆளுநர்களை மாற்றுவது மரபு என்பது ஐ.தே.க., காரர்களின் பலவீனமான வாதமாகும். மைத்திரிபால சிறிசேன தவிர்ந்த எந்தவொரு ஜனாதிபதியும் தாம் பதவியேற்வுடன் ஆளுநர்கள் அனைவரையும் பதவிநீக்கம் செய்யவில்லை. 2015 ஆம் ஜனவரி மாதம் ஜனாதிபதியாக பதவியேற்ற மைத்திரி மட்டும் அதேமாதத்தில் சகல ஆளுநர்களையும் வெளியேற்றி புதிய ஆளுநர்களை நியமித்தார்.

மாகாண ஆளுநர் பதவியானது தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வாக கொண்டுவரப்பட்ட மாகாண சபை முறைமையின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட பதவியொன்றாகும். அதிகார பரவலாக்கல் என்ற எண்ணக்கருவை அமுலாக்கும் போது ஆளுநர் மிக முக்கிய பங்கை ஆற்ற வேண்டியவராவார். மத்திய அரசாங்கத்துக்கும் அதிகார பரவலாக்களுக்குரிய அலகான மாகாண சபைக்கும் இடையிலான இணைப்பாளராகவே அவர் செயற்பட வேண்டும்.

எப்போதும் போலவே இம்முறையும் மாகாண ஆளுநர்களை நீக்குவதிலும் புதிதாக நியமிப்பதிலும் கொள்கை என்ற விடயம் சம்பந்தப்பட்டதாக தெரியவில்லை. அதாவது அதிகார பகிர்வை சீர்படுத்துவதற்காக இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. மாறாக, ஐ.தே.க.,வின் அரசியல் தேவைக்காகவே இம்மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டதாகவே தெரிகிறது.

கடந்த பொதுத் தேர்தலில் ஐ.தே.க. மாவட்ட அடிப்படையில் ஓர் ஆசனத்தையாவது பெறாது. படுதொல்வி அடைந்தது. இதனால் வெறுப்புற்ற கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கட்சியை கலைத்துவிட நினைத்ததாக அக்கட்சியின் முக்கியஸ்தரான முன்னாள் அமைச்சர் நவின் திஸாநாயக்க அண்மையில் டெய்லி மிரருடனான நேர்காணல் ஒன்றின் போது கூறியிருந்தார்.

ஆனால் ரணில் கடந்த வருடம் மே மாதம் பிரதமராகவும் ஜூலை மாதம் ஜனாதிபதியாகவும் பதவியேற்றதன் பின்னர் அவருக்குள்ளும் அவரது கட்சிக்காரர்களுக்குள்ளும் மீண்டும் முழு அதிகாரத்துடன் பதவிக்கு வருவதற்கான புதிய எதிர்ப்பார்ப்புக்கள் மலர்ந்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

சட்டப்படி உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களை நடத்தியிருந்தால் ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியும் ஐ.தே.க.,வும் நிச்சயமாக படுதோல்வி அடைந்திருக்கும். எனவேதான் பணம் இல்லை என்று ஜனாதிபதி அத்தேர்தல்களை தடுத்தார். உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களையோ, மாகாண சபைத் தேர்தல்களையோ, நடத்தாமல் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்று உலகமெங்கும் இருந்து கடன்களை பெற்று மக்களுக்கு சலுகை வழங்கி அடுத்த வருடம் நேரடியாக ஜனாதிபதித் தேர்தலை நடத்தி வெற்றி பெறுவதே ஐ.தே.க.,வின் நோக்கமெனத் தெரிகிறது.

இதற்கான பிரசார வேலைகளை ஜனாதிபதி இப்போதே ஆரம்பித்துள்ளார். ஏற்கெனவே இருக்கும் கடனுக்கு மேல் நாணய நிதியத்திலிருந்து கிடைத்திருக்கும் புதிய கடன் தொகையின் காரணமாக நாட்டில் நெருக்கடி நிலை சற்று தளர்ந்துள்ளது. அது தமது சாமர்த்தியம் என்று அவர் காட்டிக் கொள்கிறார். கடந்த சனிக்கிழமை கேகாலையில் நீர் விநியோக திட்டமொன்றை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதும் அவர் தாமே நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தை ஆரம்பித்ததாக கூறினார். அது உண்மையல்ல. கடந்த வருடம் மார்ச் மாதம் ஜனாதிபதி கோட்டாபயவே அதனை ஆரம்பித்தார்.

அத்தோடு ரணில் ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி,க்களை தம்மோடு சேர்த்துக் கொள்ளவும் முயல்கிறார். இதற்கிடையில் அரச இயந்திரத்தை தமது கட்சியின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவும் அவர் நடவடிக்கை எடுத்து வருகிறார். தெரிவு செய்யப்பட்ட மாகாண சபைகள் இல்லாத நிலையில் மாகாண ஆளுநர்களே மாகாண நிர்வாகத்தை நடத்தி வருகிறார்கள். எனவே ஆளுநர்களாக தமக்கு வேண்டியவர்களை நியமிப்பதன் மூலம் மாகாண நிர்வாகத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து அடுத்த ஜனாதிபதித் தேர்தலின் போது பயனடைய அவர் முயல்வதாக தெரிகிறது. இவற்றோடு அவர் தமிழ் மக்களின் ஆதரவை பெறும் நோக்கில் வாரம் ஒரு எதிர்ப்பார்ப்பை வழங்கி தமிழ் தலைவர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்.

ஆளுநர்கள் விடயத்தில் வட மாகாண மக்களுக்கு சகப்பான அனுபவங்களே அதிகம் கிடைத்துள்ளன. 1988 முதல் 1990 ஆம் ஆண்டு ஒகஸ்ட் வரை இருந்த இணைந்த வட, கிழக்கு மாகாண சபை பதற்ற நிலை காரணமாக முறையாக இயங்கவில்லை. போர் காலத்தில் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபையொன்று வடக்கில் இருக்கவில்லை. அப்போது இருந்த ஆளுநர்கள் நேரடியாகவே இராணுவத்தின் கட்டுப்பாட்டிலேயே இருந்தனர். போர் முடிவடைந்ததன் பின்னரும் 2015 ஆண்டு வரை இராணுவ அதிகாரி ஒருவரே ஆளுநராக இருந்தார். அவருக்குப் பதிலாக சிவிலியன் ஆளுநர் ஒருவரை நிமிக்குமாறு வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் எவ்வளவோ கோரிக்கை விடுத்தும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதற்கு இணங்கவில்லை.

பின்னர் 2015 ஆம் ஆண்டு 'நல்லாட்சி' அரசாங்கம் சிவிலியன் ஆளுநர் ஒருவரை நியமித்த போதிலும் பின்னர் வந்த ஆளுநர்களும் மாகாண சபையால் நிறைவேற்றப்பட்ட பல பிரேரணைகளுக்கு ஒப்புதல் வழங்கவில்லை என விக்னேஸ்வரன கூறியிருந்தார். ஏனெனில் ஆளுநர்கள் மத்திய அரசாங்கத்தின் அரசியல் கருவிகளாகவே செயற்படுகின்றனர்.


1993 ஆம் ஆண்டு நடைபெற்ற மாகாண சபைத் தேர்தல்களின் போது தென் மற்றும் வடமேல் மாகாண சபைகளின் பெரும்பாலான ஆசனங்களை சந்திரிகாவின் பொதுஜன ஐக்கிய முன்னணியும் அதனோடு இணைந்து செயற்பட்ட ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் பெற்றுக் கொண்டன. ஆனால் தென் மாகாண ஆளுநர் பாக்கீர் மாக்காரும் வட மேல் மாகாண ஆளுநர் மொன்டேகு ஜயவிக்ரமவும் ஜனாதிபதி டி.பி விஜேதுங்கவின் ஆலோசனைப் படி ஐ.தே.க.,வைச் சேர்ந்த இருவரை முதலமைச்சர்களாக நியமித்தனர். இது அப்போது பெரும் அரசியல் நெருக்கடியை தோற்றுவித்தது.

அதேபோல் 1994 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டு முதலமைச்சர் சந்திரிகா குமாரதுங்க மேல் மாகாண சபையில் தமது பெரும்பான்மை பலத்தை இழக்கும் அபாயம் ஏற்பட்டது. அப்போது மாகாண சபையை கலைத்துவிடுமாறு ஆளுநர் எஸ் சர்வாநந்தாவுக்கு சந்திரிகா ஆலோசனை வழங்கலாம் என்று வதந்திகள் பரவின. எனவே ஜனாதிபதி விஜேதுங்க சர்வாநந்தாவை ஆளுநர் பதவியியலிருந்து நீக்கி ஐ.தே.க.,வைச் சேர்ந்த டி.எம் சுவாமிநாதனை ஆளுநராக நியமித்தார்.

நல்லிணக்கம் ஏற்படும் வகையில் முறையாக அதிகார பகிர்வை அமுலாக்க மத்திக்கும் மாகாண சபைக்கும் இடையிலான உறவை சீராக பேணி வருவதே ஆளுநரின் தார்மிக கடமையாக வேண்டும். ஆனால் இதுவரை அவர்கள் மத்தியின் அரசியல் கருவியாகவே செயற்பட்டுள்ளனர்.

## கடிதங்கள்

### காசல்ரீயை காப்பாற்றவும்



காசல்ரீ நீர்த் தேக்கத்துக்கு நீரேந்தி செல்லும் பொகவந்தலாவ, டியன்சின் பகுதியில் கெசல்கமுவ ஒயாவில் சட்டவிரோதமான முறையில் முன்னெடுக்கப்பட்டுவரும் மாணிக்கக்கல் அகழ்வினால் காசல்ரீ நீர்த் தேக்கத்தில் நீர் மாசடைந்து வருவதாக பொதுமக்கள் கவலைத் தெரிவிக்கின்றனர்.

கெசல்கமுவ ஒயாவில் நடுப்பகுதியில் கடும் ஆழமான மாணிக்கக்கல் சுரங்க குழிகளும் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது

இதேவேளை, குறித்த யாவின் நீரினை பொதுமக்கள் அன்றாட தேவைகளுக்கு பயன்படுத்தி வருகின்றனர். சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வு முன்னெடுக்கப்படுவதால், காசல்ரீ நீர்த்தேக்கத்தில் அதிகளவிலான மண், சேறு, குவிகின்றது.

இவை, நன்னீர் மீன் வளர்ப்புக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்துவதாக தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன், கெர்க்கஸ்வோல்ட் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள உப மின் நிலைய இயந்திரங்களுக்குள் மண்ணோடு கலந்த நீர் செல்ல கூடிய அபாயமும் காணப்படுகிறது.

எஸ்.சதீஸ்



# கூட்டுறவுத்துறை மாகாண சபைக்கு உரித்தானது



கூட்டுறவுத்துறை மாகாண சபைக்கு உரித்தானது .எனவே அதனை அமைச்சருக்கோ அல்லது அமைச்சுக்கோ மாத்திரம் ஒப்படைக்கக் கூடாது என ஊடகத்துறை மற்றும் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அதற்காக முறையான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்படாவிட்டால் பெருமளவு மக்களின் வைப்புப் பணமும் இழக்கப்படும் நிலை உருவாகலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (23) ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பி அது தொடர்பில் கருத்து தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

## டொலர்கள் பதுக்கி வைப்பு



ஏற்றுமதியின் போது நாட்டில் இருந்து 10 ஆயிரம் டொலர்களை வெளிநாட்டுக்கு அனுப்பினால் 240 டொலர்கள் மாத்திரமே நாட்டுக்கு கொண்டு வரப்படுகின்றது என்றும், நாட்டுக்கு வர வேண்டிய டொலர்கள் வெளிநாடுகளிலேயே பதுக்கி வைக்கப்பட்டுவிடுவதாகவும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) வர்த்தமானி கட்டளைகள் மீதான விவாதத்தின் உரையாற்றுகையில்.

சிங்கப்பூர் போன்ற நாடுகளில் நிறுவனங்களை நடத்தி அதில் வைத்திருக்கின்றனர். இதனால் ஏற்றுமதியில் கிடைக்கும் வருமானம் குறைவாகும். மாயையான பொருளாதாரத்திலேயே நாங்கள் இருகின்றோம். இதுபோன்ற நடவடிக்கைகளை நிறுத்துவதற்காக முறைகள் இந்த சுங்க திணைக்களத்திடம் இல்லாது இருக்கின்றது. இதனால் இந்த நிறுவனத்தை நவீன மயப்படுத்தி, டிஜிட்டல் மயப்படுத்த வேண்டும். அதனை செய்யாமையே பிரச்சினைகளுக்கு காரணமாக உள்ளது என்றார்.

## கடும் தீர்மானங்கள் எடுக்கவும்



போதைப் பொருளால் மாணவர்கள் சீரழியும் நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும், உயர்தர வகுப்பில் படிக்கும் பெண் பிள்ளைகள்கூட இந்த நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இதனால் போதைப் பொருள் தொடர்பில் அரசாங்கம் கடுமையான தீர்மானங்களை எடுக்க வேண்டியது அவசியமாகும் என்று தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (23) இடம்பெற்ற உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) வர்த்தமானி கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், ஐஸ், ஹெரோய்ன், கொக்கெய்ன், சிகரெட் மற்றும் சாராயம் ஆகியவற்றால் ஏற்படும் விளைவுகள் மிகவும் பாரதூரமானது. பாடசாலை மாணவர்களும் சீரழிந்துள்ளனர். உயர்தர வகுப்பு பெண் பிள்ளைகளும் இவ்வாறான போதைப் பொருளுக்கு அடிமையாகியுள்ளனர்.

அவர்களின் கைகள் நடுங்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால் போதைப் பொருள் கட்டுப்பாடு தொடர்பில் அரசாங்கம் இன்னும் கடுமையான தீர்மானங்களை எடுக்க வேண்டும் என்று கோருகின்றேன். இதேவேளை போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கைகளால் தனக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக பொலிஸ் அமைச்சர் கூறுகின்றார். எனக்கும் இவ்வாறான அச்சுறுத்தல் இருந்தது. போதைப்பொருள் கடத்தல் காரர்கள் என்னை கொலை செய்ய பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்தனர். நான் மரண தண்டனையை அமுல்படுத்தவும் நடவடிக்கை எடுத்தேன். அது தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்கும் உள்ளது. இந்நிலையில் பாடசாலை மாணவர்களை இதில் இருந்து பாதுகாப்பதற்காக அரசாங்கம் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றார்.



## கடமைகளைப் பொறுப்பேற்பு

> ரத்தனதிஸ்ஸ அறக்கட்டளை (கூட்டிணைத்தல்) சட்டமூலத்தின் உண்மைப் பிரதியில் கையொப்பமிட்டு அவர் தனது கடமைகளை ஆரம்பித்தார்

பாராளுமன்ற செயலாளர் நாயகம் பதவிக்குப் புதிதாக நியமிக்கப்பட்ட குஷானி ரோஹணதீர செவ்வாய்க்கிழமை (23) காலை தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

புதிய பதவியில் தனது கடமைகளைப் பொறுப்பேற்பதற்காக் காலை பாராளுமன்றத்துக்கு வருகை தந்த ரோஹனதீரவை பாராளுமன்ற உதவிச் செயலாளர்களான டிக்கிரி கே.ஜயதிலக மற்றும் ஹங்ச அபேரத்ன ஆகியோர் வரவேற்றனர்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் புதிய செயலாளர் நாயகம் பதவிச் சத்தியம் செய்துகொண்டதுடன், மகா சங்கத்தினர் ஆசீர்வதித்து மத அனுஷ்டானங்களை மேற்கொண்டனர். இதனைத் தொடர்ந்து பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டு, சபாநாயகரினால் சான்றுரைப்படுத்தப்படவுள்ள ரத்தனதிஸ்ஸ அறக்கட்டளை (கூட்டிணைத்தல்) சட்டமூலத்தின் உண்மைப் பிரதியில் கையொப்பமிட்டு அவர் தனது கடமைகளை ஆரம்பித்தார்.

## மக்களைத் தெளிவுபடுத்தவும்



அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெறும் பணியாளர்களுக்கு உரிய ஓய்வூதியத்தை காலதாமதம் இன்றி வழங்குவதற்கும், அது தொடர்பான வேலைத்திட்டம் தொடர்பில் மக்களைத் தெளிவுபடுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய அரசாங்கமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார சுமித்திராராச்சி, ஓய்வூதியத் திணைக்களத்துக்குப் அறிவுறுத்தல் விடுத்தார்.

ஓய்வூதியம் பெறுவதற்கு நீண்ட காலம் காத்திருக்க வேண்டியதால் மக்கள் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளதாகக் குறிப்பிட்ட தலைவர், இது நீண்டகாலமாக நிலவிவரும் பிரச்சினை எனவும், இது தொடர்பில் அடிக்கடி முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுவதாகவும் தெரிவித்தார்.

வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய அரசாங்கமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு முன்னிலையில் அண்மையில் ஓய்வூதியத் திணைக்களம் அழைக்கப்பட்டிருந்தபோதே இந்த விடயம் குறித்துக் கவனம் செலுத்தப்பட்டது.

## ராஜகுமாரிக்கு நியாயம் வேண்டும்



கொழும்பில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்த போது உயிரிழந்த பதுளையை சேர்ந்த ராஜகுமாரியின் மரணம் தொடர்பில் முறையான விசாரணைகள் நடத்தப்படுவதாக தெரியவில்லை என்றும், இதனால் இது தொடர்பில் முறையாக விசாரணை நடத்தி சட்டத்தை நிறைவேற்ற பொலிஸ் தொடர்பான அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) வர்த்தமானி கட்டளைகள் மீதான விவாதத்தின் போது உரையாற்று கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் 41 வயதான இந்த பெண் பொலிஸாரின் தாக்குதலால் இறந்துள்ளார் என்பது உறுதியாகியுள்ளது. இது தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்து வருகின்றது. ஆனால் பொலிஸார் முறையான நடவடிக்கை எடுக்காது பொலிஸ் உத்தியோகத்தர்கள் நால்வரை இடமாற்றம் செய்துள்ளனர். இது சட்டத்திற்கு முரணான விடயமே. இது தொடர்பாக சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று பொலிஸ் தொடர்பான அமைச்சரை கேட்டுக்கொள்கின்றேன்" என்றார்.

> பொலிஸ் உத்தியோகத்தர்கள் நால்வரை இடமாற்றம் செய்துள்ளனர். இது சட்டத்திற்கு முரணான விடயமாகும்.




## அமைச்சரவை முடிவுகளில் சில...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில், திங்கட்கிழமை (22) இடம்பெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட தீர்மானங்களில் சில

### தேசிய அபிவிருத்திக் குழுவொன்றை அமைத்தல்

அரசின் புதிய கருத்திட்டங்கள்,வேலைத்திட்டங்களை மதிப்பீடு செய்யும் செயன்முறைக்கு தேசிய அபிவிருத்திக் குழுவொன்றை நியமிப்பதற்கான முன்மொழிவு ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்டது.

அதற்கமைய, அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள பெறுகைக் குழுவால் கருத்தில் கொள்ளப்பட்ட மதிப்பீட்டு செலவுகள் அல்லது அதற்கு அதிகமான மதிப்பீட்டு செலவுகளுடன் கூடிய கருத்திட்டங்கள், வேலைத்திட்டங்கள் தொடர்பாக தனது பரிந்துரைகளை அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்காக முன்னாள் திறைசேரி பிரதிச் செயலாளராக கடமையாற்றிய திரு. தயா லியனகே அவர்களுடைய தலைமையிலான குழுவொன்றை நியமிப்பதற்காக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### பசுமைப் பத்திரங்கள் சட்டகம்

பசுமை முதலீடுகளில் ஈடுபடுதல் தொடர்பாக அரசாங்கம் தனது எதிர்பார்ப்பை 2023 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தின் மூலம் வெளியிட்டுள்ளது.

அவ்வாறான பசுமைப் பத்திரங்களை வெளியிடுவதன் மூலம் கிடைக்கின்ற நிதியை மீள்புதுப்பிக்கத்தக்க வலுசக்தி, வலுசக்தி வினைத்திறன், பசுமைக் கட்டிடங்கள், தூய போக்குவரத்து, நிலைபெறுதகு நீர் முகாமைத்துவம் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவம், உள்ளிட்ட பல விடயங்களில் பயன்படுத்தக்கூடிய இயலுமை காணப்படுகின்றது.

அதற்கமைய, தற்போது பசுமைப் பத்திரங்கள் சட்டகம் வரைவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

### கொள்கை சட்டகத்தை தயாரித்தல்

கப்பல் தொழிற்றுறை உள்ளிட்ட விநியோக சேவைகள் துறையில் போட்டித்தன்மையானது, எந்தவொரு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்காக முக்கியமான காரணியாக அமைவதுடன், சிங்கப்பூர் மற்றும் ஹொங்கொங் போன்ற நாடுகளிலிருந்து பெற்றுக்கொண்ட அனுபவங்களைக் கருத்தில் கொள்ளும் போது, இலங்கை போன்ற தீவகப் பொருளாதாரத்திற்கு அது மிகவும் ஏற்புடையதாக அமையும்.

இலங்கையில் கப்பல் தொழிற்றுறை உள்ளிட்ட விநியோக சேவைகள் துறைக்கு ஏற்புடைய வகையில் தற்போது காணப்படுகின்ற கொள்கைகள் மற்றும் ஒழுங்குறுத்தல்கள் சட்டகம் மிகவும் பாதுகாப்பாக அமைவதுடன், அது குறித்த தொழிற்றுறை அபிவிருத்திக்கான முதலீடுகளைப் பாதுகாப்பதற்கோ அல்லது போட்டித்தன்மைஃசெலவு பயனுறு வகையிலான விநியோக சேவைகளைப் பயன்படுத்துகின்றவர்களுக்கு அவ்வாறான சேவைகளை விநியோகிப்பதற்கான நேயமிகு நிலைமைகளை உருவாக்குவதற்குப் போதுமானதல்ல என்பது கண்டறியப்பட்டுள்ளது.

இந்நிலைமையைக் கருத்தில் கொண்டு விநியோக சேவைகள் தொழிற்றுறை தொடர்பான கொள்கைச் சட்டகத்தை உருவாக்க வேண்டிய தேவை 2023 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தின் மூலம் முன்மொழியப்பட்டுள்ளது.

### வியாபாரங்களுக்கு விலக்களிப்புக்கள், ஊக்குவிப்புக்களை வழங்கல்

2021 ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் மூலம் துறைமுக நகரம் விசேட பொருளாதார வலயமாக நிறுவப்பட்டுள்ளது.

இலங்கையை நவீனமயமாக்கல், பொருளாதார உறுதிப்பாட்டை ஏற்படுத்தல், மற்றும் சேவைகள் ஏற்றுமதியின் முன்னோடியாக எமது நாட்டை மாற்றுதல் போன்ற நோக்கங்களை அடைவதற்காக சர்வதேச ரீதியில் போட்டித்தன்மையுடன் கூடிய வர்த்தகங்களை மேற்கொள்வதற்கு இயலுமான சூழலை உருவாக்குவதற்காக கொழும்பு துறைமுக நகரத்தை மேம்படுத்த வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, விலக்களிப்புக்கள் மற்றும் ஊக்குவிப்புக்களை வழங்குவதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 'புதிய மைல்கல் பயணம்' கண்காட்சி

இலங்கையில் சமகால மற்றும் எதிர்கால சுரங்க அகழ்வு மற்றும் கனிமங்கள் தொழிற்றுறையில் ஈடுபடுகின்ற அனைத்துப் பங்கீடுபாட்டாளர்களுக்கும் ஒரு தளத்தை வழங்கும் நோக்கில் 'புதிய மைல்கல் பயணம்' எனும் பெயரிலான சர்வதேச சுரங்க அகழ்வு மற்றும் கனிமங்கள் மாநாடு, முதலீட்டு ஒன்றியம் மற்றும் கண்காட்சி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கையின் சுரங்க அகழ்வு மற்றும் கனிமங்கள் தொழிற்றுறைக்கு உலகளாவிய வணிக அடையாளத்தின் பெறுமதியைக் கட்டியெழுப்புதல் மற்றும் பாரியளவிலான முதலீடுகள் மற்றும் பொருளாதார வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளல் போன்ற விடயங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கமைய, முன்மொழியப்பட்டுள்ள சர்வதேச சுரங்க அகழ்வு மற்றும் கனிமங்கள் மாநாடு, முதலீட்டு ஒன்றியம் மற்றும் கண்காட்சியை 2023 ஒக்ரோபர் மாதத்தில் நடாத்துவதற்காக சுற்றாடல் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### பிரதான திட்டம் – 2048 நடைமுறைப்படுத்தல்.

2015 ஆம் ஆண்டில் நகர அபிவிருத்தி அதிகார சபையால் தயாரிக்கப்பட்டுள்ள மேல்மாகாண பிரதேசங்களில் பெருநகர பிரதான திட்டங்களை மீளாய்வு செய்வதற்கு சிங்கப்பூரின் ஜூரோங் (பிரைவேட்) லிமிட்டட் நிறுவனத்திற்கு வழங்குவதற்கு 2023.05.08 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய ஆரம்ப பிரதான திட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள கருத்திட்டங்களின் முன்னுரிமையின் அடிப்படையில் நடைமுறைப்படுத்துவதற்கு இயலுமான வகையில் குறித்த திட்டம் மீளாய்வு செய்யப்பட்டு 'மேல்மாகாண பிரதேச பெருநகர பிரதான திட்டம் - 2048' தயாரிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு தயாரிக்கப்பட்ட குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான வழிகாட்டல்கள் மற்றும் வசதிகளை ஒருங்கிணைப்புச் செய்வதற்காக பிரதமர் தலைமையில் அமைச்சர் குழுவொன்றை நியமிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 'கொம்பஞ்ஞு வீதிய' பெயர் மாற்றம்

கொழும்பு பிரதேச செயலகப் பிரிவில் 'கொம்பஞ்ஞு வீதிய' கிராம உத்தியோகத்தர் பிரிவு சிங்கள மொழியில் 'கொம்பஞ்ஞு வீதிய' எனவும் தமிழ் மொழியில் 'ஸ்லேவ்ஐலன்ட்' எனவும், ஆங்கில மொழியில் '*slave island* 'எனவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த கிராம உத்தியோகத்தர் பிரிவின் பெயர் மும்மொழிகளிலும் 'கொம்பஞ்ஞு வீதிய' என அறிமுகப்படுத்துவது மிகப் பொருத்தமானது என முன்மொழியப்பட்டுள்ளது.

அதற்கமைய 1992.12.01 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை திருத்தம் செய்து புதிய வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதன் மூலம் 'கொம்பஞ்ஞு வீதிய' என்பதை அவ்வாறே மும்மொழிகளிலும் வெளியிடுவதற்காக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை உடன்பாடு வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது.

### புரிந்துணர்வு ஒப்பந்தம்

வெளிவிவகார அமைச்சு மற்றும் சவுதி அரேபிய இராச்சியத்தின் வெளிவிவகார அமைச்சுக்குமிடையில் அரசியல் ஆலோசனை தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கு முன்மாழியப்பட்டுள்ளது.

குறித்த புரிந்துணரவு ஒப்பந்தத்தின் மூலம் ஏனைய சர்வதேச நிறுவனங்களின் நேர்மய வகிபாங்குகள் மற்றும் பிராந்திய மற்றும் உலகளாவிய விவகாரங்கள், அரசியல் போக்குகள் மற்றும் பரஸ்பர ரீதியான முக்கியமான விடயங்கள் பற்றி கருத்துக்களை பரிமாறிக்கொண்டு இருதரப்பு தொடர்புகளை மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கமைய குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக வெளிவிவகார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஐதராபாத்

# சரத்பாபுவின் மறைவு வேதனையளிக்கின்றது ரஜினிகாந்த்

பிரபல நடிகர் சரத்பாபு உடல்நலக்குறைவால் ஐதராபாத்தில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்க ப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம்(22) உயிரிழந்தார்.

இதனையடுத்து அவரது உடல் ஐதராபாத்தில் உள்ள பிலிம் சேம்பர் வளாகத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அங்கு தெலுங்கு நடிகர்-நடிகைகள் நேரில் அஞ்சலி செலுத்தினர்.

அதன் பின்னர் ஐதராபாத்தில் இருந்து சென்னை தி.நகரில் உள்ள இல்லத்துக்கு அவரது



உடல் கொண்டுவரப்பட்டு அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சரத்பாபுவின் உடலுக்கு நேரில் சென்று அஞ்சலி செலுத்திய நடிகர் ரஜினிகாந்த் அவரது குடும்பத்தினருக்கும் ஆறுதல் கூறினார்.

இதன் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த ரஜினிகாந்த், ”சரத்பாபு நடிகர் ஆவதற்கு முன்பே நாங்கள் நல்ல நண்பர்கள். நடிகர் சரத்பாபுவின் மறைவு மிகவும் வேதனையளிக்கிறது. மிகவும் அருமையான மனிதர், நல்ல நண்பர், என் மீது அளவு கடந்த அன்பு வைத்திருந்தவர் சரத்பாபு. நாங்கள் இணைந்து நடித்த அனைத்து படங்களும் ஹிட் படங்கள்' என்று அவர் கூறினார்.

சரத் பாபு ரஜினி காந்துடன் முள்ளும் மலரும், முத்து, அண்ணாமலை ஆகிய படங்களில் நடித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

குஜராத்



## பிபிசிக்கு 10,000 கோடி அபராதம்?

பிரதமர் மோடி பற்றிய ஆவணப்படத்தைத் தயாரித்த பிரபல செய்தி ஊடகமான பிபிசிக்கு 10,000 கோடி ரூபாய் கேட்டு அவதூறு வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது.

குஜராத்தைச் சேர்ந்த தன்னார்வலர் ஒருவர் சார்பில் இந்த வழக்கு பதிவாகியுள்ளது. பிரதமர் மோடியின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்க எடுக்கப்பட்டதாக அந்தப் படம் மீது மனுதாரர் குற்றம் சாட்டியுள்ளார்.


பிபிசி தயாரித்த அந்தத் திரைப்படம் மத்திய அரசிடமிருந்து கடும் எதிர்ப்பை சந்தித்தது. காலனிய மனநிலையுடன் தயாரிக்கப்பட்ட படம் என்று சர்ச்சைகள் எழுந்தன.

இதனிடையே டெல்லி உயர் நீதிமன்றம் ஆவணப்படம் தொடர்பான வழக்கில் பதில் அளிக்க பிபிசிக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கர்நாடகா

## லொரியில் ராகுல்

காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவரான ராகுல் காந்தி, லொரியில் பயணம் மேற்கொண்ட சம்பவம் இணையத்தில் வைரலாகி வருகின்றது.



கர்நாடக சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி மாபெரும் வெற்றி பெற்றதற்கான முக்கிய காரணங்களில் ஒன்றாக ராகுல் காந்தியின் ‘இந்திய ஒற்றுமை பயணம்’என்ற நடைப்பயணம் கருதப்படுகின்றது.

இந்நடைப் பயணம் மூலம் கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை சென்று மக்களை சந்தித்து அவர்களது பிரச்சனைகளைக் கேட்டறிந்துவந்தார்.

இந்நிலையில், நேற்று இரவு தில்லியில் இருந்து சிம்லாவுக்கு காரில் பயணம் மேற்கொண்ட ராகுல் காந்தி, திடீரென்று சத்தீஸ்கர் நெடுஞ்சாலையில் காரை நிறுத்தி, சாலையோர உணவகங்களில் நின்றிருந்த லொரி ஓட்டுநர்களுடன் உரையாடினார்.

அதன்பிறகு, யாரும் எதிர்பாராத விதமாக கார் பயணத்தை தவிர்த்து முர்தலில் இருந்து அம்பலா வரை லொரியின் முன்பகுதியில் ஓட்டுநருடன் அமர்ந்து பயணம் மேற்கொண்டார்.

இப் பயணத்தின்போது,லொரி ஓட்டுநர்கள் சந்திக்கும் பிரச்னைகள் மற்றும் அவர்களின் வாழ்வாதாரம் குறித்து நீண்ட நேரம் உரையாடினார். தொடர்ந்து, அம்பாலாவிலிருந்து கார் மூலம் சிம்லாவுக்கு புறப்பட்டுச் சென்றதாக காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளனர்.

கயானா

# 19 மாணவர்களை பலியெடுத்த பாடசாலை

பாடசாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 19 மாணவர்கள் உயிரிழந்த சம்பவம் கயானாவில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

தென் அமெரிக்க நாடான கயானாவின் மஹ்தியா பிரதேசத்தில் அமைந்துள்ள பாடசாலைவிடுதியிலேயே நேற்று முன்தினம் இச்சம்பவம்



இடம்பெற்றுள்ளது.

இவ் விபத்தில் 12 முதல் 18 வயது வரையிலான 19 மாணவர்கள் உயிரிழந்துள்ளனர் எனவும் பலர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இவ்விபத்துக்கான காரணம் குறித்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

பிரான்ஸ்

## கேன்ஸ் திரைப்பட விழாவில் இரத்தத்தால் பரபரப்பு

கேன்ஸ் திரைப்பட விழாவில் உக்ரேனிய தேசியக் கொடி நிறத்தில் உடையணிந்து வந்த பெண் ஒருவர், உடல் முழுவதும் இரத்தத்தை ஊற்றிக் கொண்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரான்ஸில் கடந்த 16 ஆம் திகதி ஆரம்பமாகிய 76 ஆவது கேன்ஸ் திரைப்பட விழாவானது மிகவும் கோலாகலமாக நடைபெற்று வருகின்றது.

இந்நிலையில் உக்ரேன் மீதான ரஷ்ய படையெடுப்பில் உக்ரேனுக்கு ஆதரவளிக்கும் விதமாக குறித்த விழாவுக்கு உக்ரேனிய தேசியக் கொடி நிறத்தில் உடையணிந்து வந்த பெண் ஒருவர், தனது



ஆடைக்குள் மறைத்து வைத்திருந்த இரத்த நிறத்திலான திரவத்தை உடலில் ஊற்ற ஆரம்பித்தார்.

இதனால் அங்கு பரபரப்பு நிலவிய நிலையில், காவலாளிகள் உடனடியாக அப்பெண்ணை வலுக்கட்டாயமாக வெளியேற்றியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பிலிப்பைன்ஸ்

## பற்றியெரிந்த பழமை வாய்ந்த தபால் நிலையம்



எதிர்பாராத விதமாக ஏற்பட்ட தீ விபத்தில் 97 ஆண்டுகள் பழமை வாய்ந்த தபால் நிலையமொன்று தீக்கிரையான சம்பவம் பிலிப்பைன்ஸில் நேற்று முன்தினம் (22) இடம்பெற்றுள்ளது.

தலைநகர் மணிலாவில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க தலைமை தபால் நிலையமே இவ்வாறு தீக்கிரையாகியுள்ளது. இதனையடுத்து 7 மணி நேரம் போராட்டத்தின் பின்னர் தீ அணைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தீவிபத்தில் 162 கோடி ரூபாய் மதிப்பிலான பொருட்கள் தீயில் கருகி நாசமடைந்ததாகக் கூறப்படுகிறது.

# ஐ.பி.எல்: இன்று வெளியேற்றப் போட்டி

இந்தியாவின் உள்ளூர் இருபதுக்கு  20 தொடரான இந்தியன் பிரீமியர் லீக் (ஐ.பி. எல்) தொடரில், சென்னையில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள வெளியேற்றப் போட்டியில் லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸும், மும்பை இந்தியன்ஸும் மோதவுள்ளன.



ஜஸ்பிரிட் பும்ரா, ஜொஃப்ரா ஆர்ச்சர் ஆகியோர் காயங்களால் இல்லாமை, கெரான் பொலார்ட்டின் ஓய்வு, அணித்தலைவர் றோஹித் ஷர்மா, இஷன் கிஷன், சூரியகுமார் யாதவ் ஆகியோர் ஆரம்பத்தில் ஓட்டங்களைப் பெறத் தடுமாறிய நிலையில் தோல்விகளுடன் தொடரை மும்பை இந்தியன்ஸ் ஆரம்பித்திருந்தது.

எவ்வாறாயினும், சூரியகுமார் யாதவ் மீண்டும் வரவும், பியூஷ் சாவ்லா, டிம் டேவிட், கமரொன் கிறீன், ஆகாஷ் மத்வால், திலக் வர்மா, விஷ்ணு வினோத், நெஹால் வதேராவின் பங்களிப்புகளுடன் நான்காவது அணியாக தகுதிகாண் போட்டிகளுக்கு மும்பை தகுதி பெற்றிருந்தது.

அந்தவகையில் சென்னை போன்ற சுழற்சியை வழங்கக்கூடிய ஆடுகளத்தில் சூரியகுமார் யாதவ், ஷர்மா, கிறீனனது இனிங்ஸ்களே போட்டியின் போக்கை தீர்மானிக்கக்கூடியவையாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மறுபக்கமாக அணித்தலைவர் லோகேஷ் ராகுல், ஜெய்தேவ் உனத்கட்டை காயத்தால் இழந்தாலும், அணித்தலைமை, பந்துவீச்சு, துடுப்பாட்டம் எனப் பிரகாசிக்கும் குருனால் பாண்டியாவின் கீழ் மும்பைக்கு லக்னோ கடும் சவாலளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மார்க் வூட் இல்லாதது இழப்பாகவே லக்னோவுக்கு காணப்படுகின்ற நிலையில் நிக்கலஸ் பூரான், மார்க்கஸ் ஸ்டொய்னிஸ் ஆகியோர் முக்கியமானவர்களாகக் காணப்படுவதோடு, ஆரம்பத் துடுப்பாட்டவீரர்களில் குயின்டன் டி கொக் சிறப்பான ஆரம்பத்தை வழங்க வேண்டியவராகக் காணப்படுகின்றார்.






இத்தாலிய சீரி ஏ தொடர்:

## எம்போலியிடம் தோற்ற ஜுவென்டஸ்

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், எம்போலியின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-4 என்ற கோல் கணக்கில் ஜுவென்டஸ் தோற்றது.

இதேவேளை, றோமாவின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணிக்கும், சலெர்னிடானாவுக்குமிடையிலான போட்டியானது 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.



இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## சமநிலையில் லெய்செஸ்டர் நியூகாசில் போட்டி

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், நியூகாசில் யுனைட்டெட்டின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணிக்கும், லெய்செஸ்டர் சிற்றிக்குமிடையிலான போட்டியானது 0-0 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகளில்

# முதலிடம் பெற்ற சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயம்





எம்.எஸ்.எம். ஸாகிர்

நடைபெற்று முடிந்த கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகளில் சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயமானது முதலிடத்தைப் பெற்றது.

இப்போட்டி நிகழ்ச்சிகளில் இப்பாடசாலையிலிருந்து முதல் மூன்று இடங்களுக்குள் வந்தோர் பின்வருமாறு,

12 வயதுக்குட்பட்ட 4X100மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில், சுக்ரி, சாஜித், முஹீத், சிராஸ், அம்மார் ஆகிய மாணவர்கள் பங்கு கொண்டு முதலிடத்தைப் பெற்றுக்கொண்டனர்.

14 வயதுக்குட்பட்ட பிரிவில், 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் ஜே.எம். ஹஸ்னி முதலிடத்தைத் தட்டிக்கொண்டதோடு, 4X100 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில், இலாஹி, பிக்ஹ்ரி, அம்ஸர், சாரிக், சுதைஸ் அஹமட், தாபித் யூனூஸ் ஆகிய மாணவர்கள் பங்குபற்றி இரண்டாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

16 வயதுக்குட்பட்ட பிரிவில், குறிபார்த்து சுடும் விளையாட்டுப் போட்டியில் ஆதில் இரண்டாமிடமும், 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் சுஹைத் மூன்றாமிடமும், 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் அஸாம் மூன்றாமிடமும், உயரம் பாய்தல் போட்டியில் அஸாம் மூன்றாமிடமும், 400மீற்றர் ஓட்டப் போட்டியில் ஹசீப் சதா மூன்றாமிடமும் மற்றும் 4X100 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் அஸாம், சஹீத், ஆபித் முஹைடீன், ஹசீப் சதா, சராஹ்ப் அஹமட், ஆதில் ஆகியோர் பங்கு பற்றி இரண்டாமிடத்தையும், 4x400 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் அப்துல்லாஹ், சுஹைத், ஹிஸ்மி, இஹாப், அஸாம், ஹசீப் சதா ஆகியோர் பங்கு கொண்டு மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 24 மே 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.